**O.S.No. 16/2015**

**Date : 11.11.2022**

**வா.சா.1 நேசம்**

***1, 2, 4 பி.த.கு.வி***

நான் பாகபிரிவினை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா சண்முகம், அம்மா சொர்ணம்மாள் சொத்துக்களில் பாகம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தற்பொழுது சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் 40 ஆண்டுகளாக சென்னையில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து எனது அப்பா சண்முகம் பெயரில் இருந்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து எனது தகப்பனார் பெயரில் இருந்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2009ம் ஆண்டே காணாமல் போய்விட்டதால் அவர் தற்பொழுது உயிரோடு உள்ளரா என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் காணாமல் போய் 13 ஆண்டுகள் ஆகிறது. எனது மாமா மனைவி இறந்ததற்கு எனது தகப்பனார் வா.சா.ஆ.3 புகார் அளிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னா ்சென்னைக்கு வந்திருந்தார். அப்பொழுது தான் காணமல் போய் விட்டார். அதற்கு முன்னர் எனது தகப்பனார் சங்கரன்கோவிலில் தான் குடியிருந்தார். எனது தகப்பனார் 2009ம் ஆண்டு சென்னைக்கு வருவதற்கு முன்னரே அவருக்கு சிறுநீரகங்கள் செயல்இழந்த நிலையில் சென்னைக்கு குழாய் மூலம் சிறுநீர் பை பொறுத்தப்பட்டதுடன் தான் சென்னை வந்திருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு சிறுநீர் பை பொருத்தப்பட்டது உ்ள்ளிட்ட மருத்துவ தேவைகளை பிரதிவாதி தான் சங்கரன்கோவிலில் செய்தனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்பொழுது எனது தாயாரும் உடன் இருந்தார். எனது தகப்பனாரின் மருத்துவ செலவிற்கு நான் மாதம் ரூ 500 கொடுத்து வந்தேன். எனது பிராதில் தாவா சொத்து எனது தகப்பனார் மற்றும்

தாயாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தகப்பனார் 1952ம் ஆண்டு கிரையம் பெற்ற வகையில் எனது தகப்பனார், தாயாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளேன். தாவா சொத்தினை எனது பெரியம்மா புன்னியாவுடன் இருந்து கிரையம் பெற்றதால் எனது தாயாரின் பூர்வீகம் என்று கூறியுள்ளேன். 5ம் பிரதிவாதி சரஸ்வதி ஆனவர் 3ம் பிரதிவாதி குணசீலனின் மனைவி ஆவார். தாவா சொத்தில் 5ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். தாவா சொத்தில் 5ம் பிரதிவாதி எனது பெற்றோர் உயிரோடு இருக்கும்பொழுதே வீடு கட்டிவிட்டார். சண்முகம்= சொர்ணம்மாள் தம்பதியினருக்கு மூன்று மகன்கள், மூன்று மகள்கள் என்றால் சரிதான். அந்த 3மகள்கள் சேர்ந்து தான் இவ்வழக்கினை வாதிகளாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது பெற்றோரின் ஆண்பிள்ளைகளின் பெயர்களாவது 1ம் மகன் பெயர் மோன்தாஸ், 2வது மகன் தர்மராஜ், 3வது மகன் குணசீலன் ஆகும். எனது சகோதரர் தர்மராஜ் இறந்துவிட்டதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. தர்மராஜின் மனைவி சந்தனம்மாள் தற்போது உயிரோடு தான் உள்ளார். சந்தனம்மாள் திருநெல்வேலியில் உள்ளார். எனது சகோதரர் தர்மராஜிக்கு பிரசிலா மற்றும் மெர்ஸி என்ற இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். தர்மராஜின் இரு பெண் குழந்தைகளும் திருநெல்வேலியில் தான் உள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்தில் தர்மராஜிக்கும் பாகம் உள்ளது என்பது எனக்கு தெரியும்., தர்மராஜ் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான மனைவி, பிள்ளைகளுக்கும் தாவா சொத்தில் பாகம் உள்ளது என்பது எனக்கு தெரியும். எனது பெற்றோர் உயிரோடு இருக்கும்பொழுதே எனது சகோதரர் தர்மராஜ் பாகத்திற்கு ஈடாக அவர் பணம் வாங்கி கொண்டதாக கேள்வி பட்டதால் அவரது வாரிசுகளை சேர்க்கவில்லை. தர்மராஜ் அவர் பாகத்திற்கு பணம் வாங்கி

கொண்டதாக எனது தாயார் என்னிடம் கூறினார். தர்மராஜ் பாகத்திற்கு ஈடாக கொஞ்சம் கொஞ்சமாக பணம் வாங்கி கொண்டிருப்பதாக எனது தாயார் என்னிடம் கூறினார். ஆனால் தர்மராஜ் பாகத்திற்கு ஈடாக பணம் கொடுக்கப்பட்டதாக பஞ்சாயத்தார்கள் மூலம் பேச்பப்ட்டதாக எனது தாயார் என்னிடம் எதுவும் கூறவில்லை. தர்மராஜ் பாகத்திற்கு ஈடாக பணம் கொடுத்ததால் தான் தர்மராஜின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை எனவே தர்மராஜ் பாகத்திற்கு பணம் கொடுக்கப்பட்டதால் தர்மராஜிக்கு தாவா சொத்தில் பாகம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இவ்வழக்கிற்கு முன்னர் நான் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் தர்மராஜ் என்ற சகோதரர் இருந்ததாகவோ அல்லது அவர் பாகத்திற்கு பணம் கொடுத்து ஒதுக்கிவிட்டதாகவோ கூறவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதியை எனது பிராது மற்றும் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். தர்மராஜ் பாகத்திற்கு ஈடாக பணம் கொடுத்து ஒதுக்கப்பட்டதை மறுத்து நான் முதல் விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு தான். தாவா சொத்து காந்தி நகர் 1ம் தெருவில் தெற்கு பக்கம் உள்ளது. அந்த வீட்டின் வாசல் வடக்கு நோக்கி உள்ளது. பிராது சொத்து விவரத்தில் முன்பு ஊர் பொது இடமான இருந்து தற்போது காந்தி நகர் 1ம் தெருவுக்கு வடக்கு என்று மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பழைய 1ம் தெருவாகும். அது தாவா சொத்திற்கும் வடக்கில் உள்ளது. தாவா சொத்து விவர மால் தவறானது என்றால் சரியல்ல. அதன்படி பூமியில் சொத்துக்கள் எதுவும் அமையபடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் கிழக்கில் 3 அடி அகல் சொந்த நடை பாதை உள்ளதாக பிராது சொத்து விவரத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த மூன்று அடி நடை பாதையை பிராது சொத்துவிவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த நடைபாதை மொத்த சொத்திற்குள் தான் உள்ளது.

தாவா சொத்தினை நான் அளவீடு எதுவும் செய்தது கிடையாது. தாவா சொத்தில் பாதி இடத்தில் கட்டுமானமும், பாதி இடம் காலி மனையாக உள்ளது. தாவா சொத்தில் உள்ள கட்டுமானமானது 5ம் பிரதிவாதி சரஸ்வதியால் கட்டப்பட்டது. தாவா சொத்து விவர வடபுற மாலில் 5ம் பிரதிவாதி சரஸ்வதி வீட்டிற்கு தெற்கு என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான். பிராது சொத்து விவர மாலின் படி 5ம் பிரதிவாதி வீட்டிற்கும் தெற்கில் உள்ள சொத்திற்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். பிராது சொத்து விவரத்தில் கண்ட அளவுகளானது 5ம் பிரதிவாதியின் வீட்டையும் சேர்த்தது ஆகும். இவ்வழக்கு தாக்கல் செய்யும்போதே தாவா சொத்தில் 5ம் பிரதிவாதி கட்டியுள்ள வீடு இருந்தது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி கட்டியுள்ள வீட்டினை பிராது சொத்து விவரத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில்உள்ள வீட்டில் நாங்கள் பொதுவாக குடியிருந்து அனுபவம் செய்ததாக பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராது சொத்து விவரம ் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிராது சொத்துவிவரம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளமையால் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>வேண்டுகோளுக்கிணங்க குவி தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.</u>